# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

******

முறையீட்டு மனு எண். 137/ந/2017

ஆணை எண். 204/2017

நாள் : 21/08/2017

**திரு ஜி. பரமன்,**
**சிவகாசி.** – முறையீட்டு மனுதாரர்

**நகராட்சி ஆணையர்,**
**சிவகாசி நகராட்சி,**
**சிவகாசி.** – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி கிழக்கு, 263/1, A.S.K.D. தங்கையா சாலை முகவரியில் வசிக்கும் திரு G. பரமன் அவர்களது 13.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 16.06.2017 அன்று பெறப்பட்டு, 137/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகராட்சி, சிவகாசி கிழக்கு, எண்.263/1, A.S.K.D. தங்கையா சாலை என்ற முகவரியில் வசிக்கும் திரு G. பரமன் என்பவர், 1986–ஆம் ஆண்டு, சிவகாசி நகராட்சி முதன் முதலாக நகர நில அளவை வரைபடம் தயாரிக்கும்பொழுது, புல எண்.628/1A–ல் இருந்த நிலத்திற்கு 725 முதல் 762 வரையிலான புதிய புல எண்கள் 735/1 ஐ மற்றும் 735/2 முறையே ஓடை மற்றும் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டதாகவும், பிற புல எண்கள் பட்டா நிலம் என வகைப்படுத்தப்பட்டதாகவும், தெரிவித்துள்ளார். மேலும், மேற்படி புல எண்களில் புல எண்.735/ 2 தனக்குப் பாத்தியப்பட்டது என நீதிமன்றம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, 735/2 புல எண் கொண்ட நிலத்திற்குப் பட்டா வழங்க ஆவண செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டது. சிவகாசி நகராட்சி, வார்டு எண். டி, பிளாக் எண்.21, நகர புல அளவை எண்.1 ஓடை என நகர கணக்கில் தாக்கலாகி உள்ளது என்றும், நகர ஆவணங்களில் ஓடை புறம்போக்கு என உள்ளது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு பட்டா வழங்குவது வருவாய் துறையைச் சார்ந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் திரு G.பரமன் அவர்களிடம் 07.06.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது தனது நிலம் ஓடைப் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டு விட்டதாகவும், இந்நிலத்திற்கு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நகராட்சியால் பட்டா வழங்க இயலாது எனத் தனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டார். மேலும், வட்டாட்சியருக்கு மனுச் செய்து பட்டா பெற்றுக் கொள்கிறேன் என்றும், பட்டா பிரச்சினைத் தவிர வேறு பிரச்சினை எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார்.

4. சிவகாசி நகராட்சி ஆணையரும் 08.08.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்ட விவரங்களையே உறுதி செய்தார். இந்நேர்வு குறித்த முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை தனது நிலத்திற்கு பட்டா வழங்குவது பற்றியதாகும். 1986–ஆம் ஆண்டு நகர நில அளவை வரைபடம் தயாரிக்கும்போது மனுதாரரின் நிலம் ஓடைப்புறம்போக்கு எனக் குறிப்பிடப்பட்டு விட்டது. இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தனக்குச் சாதகமான தீர்ப்பினை மனுதாரர் பெற்றுள்ளார். எனினும், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரின் நிலத்தின் வகைப்பாட்டினை திருத்தம் செய்து, அந்நிலம் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரருக்கு பட்டா வழங்குவது வருவாய் துறையைச் சார்ந்ததாகும். மனுதாரரும் வட்டாட்சியருக்கு மனுச் செய்து பட்டா பெற்றுக் கொள்கிறேன். என விசாரணையின்போது தெரிவித்துள்ளார். எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 21–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
21.8.17

22/8/17

பெறுநர்

1. திரு ஜி. பரமன்,
263/1, A.S.K.D. தங்கையா சாலை,
சிவகாசி கிழக்கு,
சிவகாசி
விருதுநகர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையாளர்,
சிவகாசி நகராட்சி,
சிவகாசி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்